**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**
**Date of Publication : 5th & 6th of Every month**

| Regd. No. TN / CC (S) DN / 119 /12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-606/12-14 |
| --- | --- |

வேணு : 17 | மே 2012 | கானம் : 10



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

**மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்**
**வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை**




வேணு : 17 | மே 2012 | கானம் : 10



மார்ச் 25 - 31, சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் கோவிலில் பக்தி விழாவில் உபன்யாசம்





குடியாத்தம் கருப்புளீஸ்வரர் கோவில்
திருநாவுக்கரசர் ஜெயந்தி விழா 15.4.2012



ராணிப்பேட்டை மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை மற்றும்
மரக்கன்று நடுதல் 15.4.2012



ஏப்ரல் 12, 2012 திருநாங்கூர் திருஅரிமேய விண்ணகரம்
ஸ்ரீகுடமாடு கூத்தர் திருக்கோவில்
மஹாஸம்ப்ரோக்ஷணம்

## SOUVENIR – மலர் வெளியீடு



**நகல் பிரதி விரும்புவோர் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவைன் இந்தியா டிரஸ்ட்**, 10/26, ராமகிருஷ்ணாபுரம் 2வது தெரு, மாம்பலம், சென்னை - 33, தொலைபேசி - 23718351 அல்லது மாம்பலம் மதுரம் புத்தக விற்பனை 044-23727400 / 09442613710 அல்லது தங்களது அருகிலுள்ள நாமத்வார் மையங்களை அணுகவும்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அன்பர்கள் அனைவர் இல்லத்திலும் வைத்து பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் இது. அளவான எண்ணிக்கையே பிரசுரிக்கப்படுவதால், ரூ250 மற்றும் அதற்கு மேலாக நன்கொடை அளிப்போருக்கு மட்டும் பிரதிகள் தீரும் வரையில் இது கிடைக்கும்.
















ஏப்ரல் 6 தஞ்சை
கந்த சரஸ் மஹாலில்
மஹாமந்திர
கூட்டு பிரார்த்தனை

மார்ச் 23-31 சென்னை
ப்ரேமிக பவனத்தில்
ஸ்ரீமத் ராமாயண
மூலபாராயணம்





ஏப்ரல் 13 தமிழ் சித்திரை
பிறப்பு - மதுரபுரி ஆஸ்ரமம்
கன்யாகுமரி
ஜயஹனுமான் சன்னதி
லக்ஷ தீபம்



# அன்பின் வழியில் நமது பயணம்

## SOUVENIR - மலர் வெளியீடு

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடனும் வழிகாட்டுதல்படியும் இயங்கும் ஸ்தாபனங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றிய விரிவான தகவல்கள் அடங்கிய ஒரு நினைவு மலர் (SOUVENIR) பெங்களூர் ஸ்ரீசந்த்ர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீசைதன்ய மஹாப்ரபுவின் ஜெயந்தியான மார்ச் 8 அன்று வெளியிடப்பட்டது.






ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் எழுதிய மதுரபுரியின் உதயம், ஒரே ஒரு குறை, ஆலய வழிபாடு போன்ற பல அரிய கட்டுரைகள், மிக அரிதான புகைப்படங்கள், உலகெங்கும் பற்பல இடங்களில் அன்பர்கள் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து வரும் விவரங்கள், நாம அனுபவங்கள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.






மார்ச் 25 - DFW Hindu Temple, USA
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை
பூர்ணிமாஜி உபன்யாசம்

மார்ச் 30, ஏப்ரல் 1 - Hindu Temple of Wisconsin, Milwaukee, USA - பூர்ணிமாஜி உபன்யாசம்







ஏப்ரல் 1 - 10, 2012
ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரில்
ஸ்ரீராமானுஜ வைபவம் -
முரளிஜி உபன்யாசம்



ஏப்ரல் 15 - விருதுநகர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - ராமானுஜம்ஜி

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

வேணு:17 மே 2012 கானம்:10

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**


- மதுரமான மஹனீயர்-194 03
- மதுர யாத்திரை 07
- பக்தர்களி கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் 10
- பாகவத பழம் -26 12
- பெத்த பிள்ளையும் வித்த புளியும் 16
- பாலகர்களுக்கு ஒரு கதை 19
- ஆலய தரிசனம் 29
- ப்ருந்தாவன கண்ணன் 42
- மாலே மணிவண்ணா 44
- அப்பாலுக்கு அப்பால் 46


கோபீசந்தனம் இருக்கும் வீட்டில் அக்ஷய சுபிக்ஷமும், ஸந்ததியினருக்கு சுகமும் இருக்கும். புஷ்கரக்ஷேத்ர மண்ணுடன் சேர்த்து இதை தேகத்தில் அணிந்தால், ஸகல வியாதிகளும் நீங்கும். கோபீ சந்தனத்தை தரிப்பதாலும், நினைப்பதாலும், ஒருவன் மதுபானம், பிரும்மஹத்தி, கோஹத்தி, சிசுஹத்தி முதலிய மஹாபாபங்களும், ஸகல தோஷங்களும் நீங்கப்பெற்று, கங்கையில் குளித்தது போன்று சுத்தமாவான். கோபீசந்தனம் கிடைத்தபின் தீர்த்த, க்ஷேத்ரங்களுக்கு அவசியமில்லை. சிராத்த காலத்தில் தரிப்பவன், பித்ருக்களுக்கு மகிழ்ச்சியை தருவான். கோபீசந்தனத்தை தினமும் தரிப்பவன், விஷ்ணு மயமாகி விடுவான். அந்திம காலத்தில் நெற்றியில் தரிப்பவன், விஷ்ணு பதம் அடைவான்.

– பத்மபுராணம்

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: ஸஹானா தாளம்: ஆதி

<u>பல்லவி</u>

பள்ளி பருவத்தில் அள்ளியெனை ஆட்கொண்ட
கள்ளனே! கார்முகில் வண்ணனே!
(பள்ளி ..)

<u>அனுபல்லவி</u>

துள்ளும் மனதில் வந்து அமர்ந்து
சொல்லும் பொருளும் போல் பிரியாதிருப்பாய்
(பள்ளி ..)

<u>சரணம்</u>

அகர அர்ச்சா அவதார தெய்வமே!
நிகரில்லா தெய்வமே! கலியுக வரதனே!
மகர குழைக்காத மலர்மங்கை மணாளனே!
புகல் வேரன்றி திருவடியடைந்தேனே!
(பள்ளி ..)

முன் அட்டை: தூத்துக்குடி நாமத்வாரில் ஸ்ரீஸ்வாமிஜி

தேதிகள் : ஏப்ரல் 7, 8

பின் அட்டை : தூத்துக்குடி நாமத்வாரில் அலங்காரத்தில் ஸ்ரீப்ரேமிகவரதன்



# மதுரமான மஹநீயர் – 194

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

தமிழ்நாட்டில் வேலூருக்கு அருகே குடியாத்தம் என்ற ஊரிருக்கிறது. குடியேற்றம் என்ற ஊரின் பெயர்தான் மருவி இன்று குடியாத்தம் என்று ஆகி விட்டது. தமிழ்நாட்டில் பலப்பல ஊர்களிலும் நாமகீர்த்தனம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளினால் பல அன்பர்களால் நடைபெற்று வருவது நமக்கு தெரிந்த ஒன்றுதான். குடியாத்தத்தில், திரு.மாணிக்கம் அவர்களால் இன்று வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு மஹாமந்திர கீர்த்தனம் நடைபெறுகின்றது. திரு.மாணிக்கம், அந்தந்த பகுதிகளுக்கு, கையில் ஜால்ராவுடன் சென்று, நாமகீர்த்தனத்தை ஆரம்பித்து வைத்து வருவார். மார்கழி மாதம் அதிகாலையிலேயே நகர கீர்த்தனத்திற்கு கிளம்பி விடுவார். அடிக்கடி அகண்ட நாம கீர்த்தனமும், அன்னதானமும் செய்வார். இவருடன் சேர்ந்து, பள்ளி ஆசிரியர் திருமாலும் நாமகீர்த்தனம் தழைக்க பாடுபடுகின்றார். அவர் எங்கு சொற்பொழிவிற்கு சென்றாலும், அங்கு நாமகீர்த்தனத்தை ஆரம்பித்து வைத்து விடுவார். திரு.மாணிக்கம் குடும்பம் முழுவதுமே குருநாதரிடம் ஈடுபாடு உடைய குடும்பம்.



ஸ்ரீஸ்வாமிஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை 2007இல் ஆரம்பித்ததிலிருந்து, ஏராளமானோர் அபரிமிதமான பலன்களை மிக சுலபமாக பெற்று வருவது அவரவருக்கும் அனுபவம்தானே? இந்த கூட்டு பிரார்த்தனை வைத்து கொள்ள வேண்டும் என்று எல்லோருமே ஆசைப்படுவர். அப்படித்தான், சென்ற மாதத்தில் ஒருநாள் (பிப்26) திரு.மாணிக்கம் அவர்கள், குடியாத்தத்தில் ஒரு கூட்டு பிரார்த்தனை ஏற்பாடு செய்திருந்தார். அந்த தினம், பல்லலகுப்பம் என்ற ஊரில் நடைபெற்ற ஸ்ரீராமர் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு விட்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கூட்டு பிரார்த்தனைக்காக குடியாத்தம் சென்றார். திரளாக பக்தர்கள் வந்திருந்தனர். வேலூரில் இருந்து திரு.அச்சுதன் அவர்கள் வந்திருந்தார். அவர் அந்த வட்டாரத்தில்

உள்ள ஊர்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜி வரும்பொழுதெல்லாம், தவறாமல் வந்து கலந்து கொள்வார். அன்று அவர் வருவதற்கு சற்று தாமதம் ஆகி விட்டது. அதற்குள், ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசம் ஆரம்பித்து விட்டது. நல்ல கூட்டம் வேறு. அவர் ஷீரடி செல்ல திட்டம் இட்டிருந்தார். அதை ஸ்ரீஸ்வாமிஜியிடம் சொல்லி, உத்திரவு வாங்கி கொண்டு செல்ல வேண்டும் என்று ஆசை ஆசையாக வந்திருந்தார். ஆனால், அதற்குள்ளாக உபன்யாசம் ஆரம்பித்து விட்டது.

ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரையை கேட்டவாறு இருந்த திரு.அச்சுதன் மனதில் பல்வேறு எண்ணங்கள். கூட்டத்தை பார்த்தாலோ, உபன்யாச முடிவில் கூட ஸ்ரீஸ்வாமிஜியின் அருகில் செல்ல முடியும் என்று அவருக்கு தோன்றவில்லை. நாம் பிரார்த்தனை செய்வதும், நினைப்பதும் குருநாதருக்கு நிச்சயமாக தெரியும் என்று தன்னையே திரு.அச்சுதன் சமாதானப்படுத்தி கொண்டார். இருப்பினும், “நேருக்கு நேர் ஸ்ரீஸ்வாமிஜியிடம் பேசியிருந்தால் இதை தவிர்த்திருக்கலாமே, தாமதமாகி விட்டதே” என்றெல்லாம் அவர் மனம் நொந்து கொண்டது. அப்பொழுது அவர், “ஸ்ரீஸ்வாமிஜி நாம் ஷீரடி செல்வதற்கு அனுமதி கொடுப்பதாக இருந்தால், இன்றைய லெக்சரில் ஷீரடி பற்றி பேச வேண்டும்” என்று நினைத்து கொண்டார். அவர் நினைத்த சில கணங்களிலேயே, ஷீரடி பற்றி ஒரு விஷயம் சொல்லி விட்டு, பல பக்தர்கள் கூடியிருக்க, திரு.அச்சுதனையே நேருக்கு நேராக பார்த்தார் ஸ்ரீஸ்வாமிஜி. அந்த பார்வைக்குத்தான் என்ன சக்தி என திரு.அச்சுதன் வியந்தார். அதனால் அவர் அடைந்த வியப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் எல்லையே இல்லை.

இதுபோல் ஸ்ரீஸ்வாமிஜி உணர்வுபூர்வமாக, பக்தி பாவங்களில் மூழ்கி உபன்யாசம் செய்கையில், பக்தர்களுக்கு பல அனுபவங்கள் ஏற்படுவதுண்டு. உபன்யாசத்தை கேட்கும் ஒருவருக்கு அவரது அலுவலில் இருக்கும் தொல்லைக்கு தீர்வு கிடைக்கும். சிலருக்கு மன உளைச்சல் களையவும், உடல் துன்பம் தீரவும் வழி பிறக்கும். சிலர் ஜப,தியானங்கள் செய்பவராக இருப்பர்.

அவர்களுக்கு சில சந்தேகங்கள் இருக்கும். அதற்கான விடையும், சாதனைகளில் மேலும் முன்னேற தெளிவும், வழியும் தெரிய வரும். இதில் ஆச்சரியம் என்னவென்றால், சில சமயம் கேள்விகளை கேட்காமலேயே கூட அப்படி பதில்கள் கிடைக்கும்.

சென்ற மாதத்தில் (மார்ச் 25-31) கே.கே.நகர் பாரதிதாசன் காலனியில் உள்ள புவனேஸ்வரி அம்மன் கோவிலில், ஸ்ரீஸ்வாமிஜி பக்த விஜயம் உபன்யாசம் செய்தார். ஒருநாள், ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீபோதேந்திராள் சரித்திரத்தை விரிவாக சொல்லி கொண்டிருந்தார். திருமதி.காஞ்சனா சங்கரன் ஒரு நெடு நாளைய பக்தை. போதேந்திராளின் சரித்திரத்தை ஸ்ரீஸ்வாமிஜி சொல்ல சொல்லவே, திருமதி.காஞ்சனா சங்கரன் அவர்கள், சில நொடிகளுக்கு மேடையில் ஒரு பேரொளியை கண்டார். இதுபோல் பல இடங்களில், பல பக்தர்களுக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்படுவதும் உண்டு.


GOD
**GOPA KUTEERAM**

**A Indian Heritage Camp**

Pray from the heart (Slokas)
Pleasing Tunes (Bhajans)
Salute the Sun (Thanking/welcoming the Sun God)
Hastha Kala ( Arts for the young shilpi)
Yummy & Healthy (The taste of our traditional food)
Traditional treasure ( Presentation on Bommalattam/Villu pattu)
Good old games ( Revisiting some games of yesteryear)

**For Ages 5-12 Years On May 26,27 & 28**
**At Amara Bharathi Thiruvanmiyur**
**Registration open!!! All are Welcome**

All proceeds from this camp goes for the non profit Organisation GOD. GOD supports youth, education activities for under privileged children. Suggested contributions starts from Rs.750/- per child. Lunch and snacks will be provided. For registration pls contact Smt.Sudha at 98009-10199 and Email : gopakuteeram@gmail.com.


WEB
MOBILE APPS
BUDDIES INFOTECH
PRIVATE LIMITED
GAMES
DESIGN
Santhome High Road, Santhome, Chennai


Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji
VAPSSKY
absolute motion machine
Our products
Globe Tipper
GLOBE TIPPER
Unit Converter
UNIT CONVERTER
Smart Alarm Pro
PRO
smart Alarm
DRACO, The Dragon
DRACO
Our Solutions
Mobile Games
Mobile Data Security Systems
Multimedia content Exchange
Mobile Applications
Mobile Enhancement Utilities
3D Multiplayer Games
For any Business Related Enquiry email us at contact@vapssky.com

## வ்ருத்திம் கர்நாடக கதஹா – 3

– ஸ்ரீராமானுஜம்

ஸ்ரீஸ்வாமிஜி பற்றி நன்கு தெரிந்தவர்களுக்கு ஒன்று தெரியும். அது என்னவென்றால் அவர் எந்த மஹாத்மாவை பற்றி பேசி கொண்டிருக்கிறாரோ, எந்த புனித தலத்தில் இருக்கிறாரோ, எந்த புராணத்தை பற்றி பேசிக்கொண்டிருக்கிறாரோ, அப்படியே அந்தந்த சிந்தனைகளில் மூழ்கி, தன்மயமாகி விடுவார்.

பிருந்தாவன யாத்திரை செல்ல போகிறார் என்றால், அங்கு செல்லும் முன்னரே, அனைவரையும் மனதாலேயே பிருந்தாவனத்திற்கு கூட்டி சென்று விடுவார். எப்பொழுதும் கோபிகைகள் பற்றியும், பிருந்தாவன மஹிமை குறித்தும், கிருஷ்ணன் குறித்தும் பேசிக்கொண்டே இருப்பார். அக்காலங்களில், அவர் சாதாரணமாக பேசும்பொழுது கூட, சொற்றொடர்கள் பிருந்தாவனத்தை சம்பந்தித்தே வரும். அவர் பாகவதத்தில், கிருஷ்ணனை பற்றி பேச ஆரம்பித்தாரென்றால், அப்படியே நாட்கணக்கில் செல்லும். கீர்த்தனைகளும் அப்படியே, கிருஷ்ணன் மேலும், பிருந்தாவனம் மேலும், ராதை மேலும் வந்தவண்ணம் இருக்கும். ப்ரேமிகபவனத்திலும் மதுரபுரி ஆஸ்ரமத்திலும் இந்தவிதமான பாவங்களே தொடர்ந்து அவரிடத்தில் காணப்படும். அவருக்கு அலுக்கவே அலுக்காது. வேறு பாவங்களும், அச்சமயத்தில் அநேகமாக அவரிடம் காணப்படவே காணப்படாது.

அப்படியே திருவண்ணாமலயில், பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் ஸ்ரீமத்ராமாயணம் உபன்யாசம் செய்ய போகிறார் என்றால். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் அனுமன் பற்றியோ ராமர் பற்றியோ எண்ணங்களும் பாவமும் மேலிட்டு, அப்படியே அவர் அதில் மூழ்கி இருப்பதை காண முடியும். இதிலிருந்து அவராகத்தான் வெளியில் வருவார். துவாரகை யாத்திரை சென்றாலோ, அப்படியே ஸ்ரீவல்லபரின் ஸ்ரீநாத் பற்றியே பேசிக்கொண்டு இருப்பார். சூர்தாஸ், வல்லபதாஸ், கிருஷ்ணதாஸ்

என்றும் வல்லப சம்பிரதாயம் குறித்தும், கிருஷ்ணனுக்கு அங்கு நடக்கும் உபசாரங்கள் குறித்தும் பேசிய வண்ணம் இருப்பார்.

இவையெல்லாம் வெளியில் இருந்து பார்க்கும் ஒருவர் புரிந்து கொண்டாலும், புத்திக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் அல்லவா! ஆனால் நம் புத்திக்கும் எட்டும்படி, ஒரு சில விஷயங்கள் அப்பொழுது நடப்பதை கண்கூடாக பார்க்க முடியும். அது என்னவென்றால், அந்தந்த பாவங்களில் ஸ்ரீஸ்வாமிஜி ஆழ்ந்திருக்கையில் அந்தந்த ஸ்வாமி அல்லது மஹாத்மா சம்பந்தப்பட்ட அன்பர்கள் வந்து சந்திப்பதும், தெய்வ பிரசாதம் தேடி வருவதும், அந்தந்த மஹாத்மா பற்றிய புத்தகங்களை யாராவது ஒருவர் கொண்டு வந்து கொடுப்பதும், மிக இயல்பாக நடக்கும். இதற்காக என்று ஸ்ரீஸ்வாமிஜியிடமோ, பிறரிடமோ ஒருவிதமான பிரயத்தனமும் இருக்காது.

ஒரு விஷயம்தான் என்றில்லை. பல விஷயங்களில் இப்படி நடந்தவாறு இருக்கும். சம்பவங்கள் ஒரே கோர்வையாக நடக்கும். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருகில் இருப்பர்களுக்கு இது புதிதே அல்ல. ஆனால், ஆச்சரியமாக இருக்கும். இந்த மதுர கர்நாடக யாத்திரையிலும், அப்படித்தான் இருந்தது.

நவீன்பட்டின் தந்தை கோபால்பட்ஜி குடும்பத்தின் வீடு மிக அழகானது. சாலையை விட்டு கீழே இறக்கமாக இருந்த அதனை சுற்றி, ஒரே அழகான காட்சிதான். நவீன்பட்டின் குடும்பத்தார் அனைவரும் மிக உற்சாகமாக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை வரவேற்றார்கள். யோகேஷ்பட்டின் சித்தப்பா ஒருவர் ஸ்ரீஸ்வாமிஜியை தமது வீட்டிற்கு அழைத்தார். அது மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் அந்த வீட்டிற்கு அனைவரும் சென்றோம். அங்கு சென்றபிறகுதான், எதேச்சையாக நிகழ்வது போல் தோன்றும் விஷயங்களில், ஆழ்ந்த காரணம் இருப்பது எல்லோருக்கும் புரிந்தது.

மிக மிக அழகிய வீடு அது. சுற்றிலும் பாக்கு மரங்கள்தான்.

வீட்டின் பின்பக்கம் சிறு ஓடை ஓடுகிறது. வீட்டின் பின்பக்கம் என்னவென்றால் ஒரு மலையடிவாரம். அங்கு ஒரு சிறு காடே இருக்கிறது. விதம் விதமான பச்சை பசேலென மரங்கள். குறிப்பாக பாக்கு மரங்கள். சில சமயங்களில் கரடியும் புலியும் கூட, அங்கு வந்து விடுமாம்! வீட்டை பார்த்து விட்டு, ஸ்ரீஸ்வாமிஜி கிளம்புகையில், அவரை பூஜை அறைக்கு அழைத்தனர். அங்கு நுழைந்தவுடன் அவர் பூஜை அறையில் இருந்த ஒரு புகைப்படத்தை பார்த்து விட்டு, சட்டென "இவர் ஸ்ரீதர ஸ்வாமிதானே?" என்று கேட்டார். வீட்டுக்காரர்கள் எல்லாம் அதிசயித்து போய் "ஆமாம்" என்றனர். காரணம், அந்த மஹாத்மாவை பற்றி தமிழ்நாட்டில் உள்ளோருக்கு அதிகம் தெரிய வாய்ப்பில்லை.

சுமார் ஆறு மாதகாலமாகவே ஸ்ரீஸ்வாமிஜி, ஸ்ரீதரஸ்வாமி பற்றி பல புத்தகங்களை படித்து கொண்டிருந்தார். பலரையும் படிக்க சொல்லியும் வந்தார். ஸ்ரீஸ்வாமிஜிக்கு அவருடைய சரித்திரம் மிகவும் பிடித்திருந்தது. அவரது வாழ்வில் நிகழ்ந்துள்ள சுவை மிகுந்த சம்பவங்கள் பலவற்றை, பலரிடமும் ஸ்ரீஸ்வாமிஜி சொல்லி வந்தார்கள். நவீன் பட்டின் உறவினர் வீட்டில் ஸ்ரீதரஸ்வாமியின் புகைப்படத்தை பார்த்தவுடன், ஸ்ரீஸ்வாமிஜி அவரது அதிஷ்டானம் எங்குள்ளது என்று வினவினார். அது 50மைல் தொலைவில்தான் உள்ளது என்று பதில் வரவே, அன்று மாலையே, அங்கு செல்ல முடிவு செய்தார் ஸ்ரீஸ்வாமிஜி.

அன்று மாலை, ஸ்ரீதரஸ்வாமியின் அதிஷ்டானத்திற்கு செல்லும்பொழுது, அவரது சரித்திரத்தை, மற்றொருமுறை முழுவதுமாக படித்தவாறு இருந்தார். "பார்! அவரது கண்கள் எப்படி ஜொலிக்கின்றன என்று! சிறு குழந்தையை போல் அவரது முகம் தோன்றுகிறதே. நாம் ஒரு பெரிய மஹானின் அதிஷ்டானத்திற்கு செல்ல போகிறோம் " என்றார். அப்படியே பேசிக்கொண்டிருந்தவர், தானாகவே, ஸ்ரீஸ்ரீதர ஸ்வாமி அவர்களின் சரித்திரம் குறித்து பேச தொடங்கினார்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: நாமகீர்த்தனம் முடிந்த பொழுதெல்லாம் செய்து வருகின்றேன். ஆனால் எனக்கு நிறைய கெட்ட கெட்ட கனவுகள் வருகின்றன. என்ன காரணம்?

பதில்: நாம் செய்துள்ள பாபங்கள், பலனை கொடுக்க காத்து கொண்டிருக்கும். அதன் பலனாக சில கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி இருக்கும். நாம் நாமகீர்த்தனம் செய்து வருவதால், பகவான் கருணையோடு அந்த கஷ்டங்களை கனவில் கொடுத்து கழித்து விடுகின்றான்.

கேள்வி: மனிதர்கள் கருணையே இல்லாமல், ஒரு உயிரை கொன்று அதை உண்டு வாழ்கின்றார்களே?

பதில்: மனிதர்கள் விஷயத்திலேயே, நாம் பலவற்றை கேள்விப்படுகின்றோம். பிறந்து சில தினங்களே ஆன, குழந்தையை குப்பை தொட்டியில் போட்டு விடுகின்றார்கள். சிறு குழந்தைகளை கடத்தி சென்று, கொத்தடிமையாக்கி கொள்கின்றார்கள். அல்லது பிச்சை எடுக்க செய்கின்றனர். பிறரை துன்புறுத்தி, அதில் இன்பம் காண்பவர்களும் பலர் உள்ளனர். சிலர் பெண்களையும், தன்னிடம் வேலை பார்ப்பவர்களையும், படாத பாடு படுத்துகின்றார்கள். சிலர் விரோதம் என்று வந்து விட்டால், அடிதடியில் இறங்கி, கொலை கூட செய்கின்றார்கள். சகோதரர்கள் கூட, ஒருவருக்கு ஒருவர் சொத்து விஷயத்தில் ஏமாற்றுகின்றார்கள். வியாபாரம் செய்வோர், ஒருவருக்கு ஒருவர் வஞ்சிக்கின்றார்கள் . மனிதர்களுக்குள்ளாகவே ஒருவர் மேல் ஒருவருக்கு கருணையோ, இரக்கமோ இல்லை. இவர்கள் வாயில்லாத ஜீவனிடமா இரக்கம் காட்ட போகின்றார்கள்?


கேள்வி: நான் நிறைய நாம கீர்த்தனம் செய்து வருகின்றேன். தெய்வீகத்தில் சிறிதளவு கூட முன்னேற்றத்தை என்னால் உணர

முடியவில்லையே? ஏன்?

பதில்: நாம் நாமகீர்த்தனம் செய்து வர வர, முதலில் நம் மனதில் உள்ள பாவங்கள் குறையும். பாவங்கள் குறைந்தால்தான் மனது சுத்தமடையும். சுத்தமான மனதில்தான் தெய்வீக முன்னேற்றத்தை உணர முடியும்.

கேள்வி: சிலர் தான் தெய்வாம்சத்துடன் பிறந்து இருப்பதை கூட அறியாமல் இருப்பார்களா?

பதில்: ஆம்! அப்படியும் சிலர் உண்டு. பகவான் அவர்களுக்கு அதை உணர்த்துவது இல்லை. ஒருவரை மகாத்மாவாக ஆக்குவது பகவான்தான். சிலருக்கு, தான் செய்துள்ள கிருபையை, பகவான் புரிய வைக்காமலேயே இருந்து விடுவான்.





## பாகவத பழம் 26

**பாகம் 2 – அத் ௯** – ஸ்ரீஸ்வாமிஜி

பீஷ்மர் தொடர்ந்து கிருஷ்ணனை துதித்தார் “அப்படி நீ உன் கண்களால் எதிரி சைன்யத்தைக் காட்டியபொழுது அர்ஜுனன் அந்த சைன்யத்தில் உள்ளவர்களை எதிரிகள் என்று பார்க்காமல் தாத்தா, குரு, சகோதரர்கள் என்று பந்துக்களாகப் பார்த்ததால் பாசம் ஏற்பட, யுத்தம் செய்யமாட்டேன் என்று வில்லைக் கீழே வைத்தான். அக்ஞானத்தாலும், பாசத்தினாலும் ஏற்பட்ட, இந்த ஒரு துர்புத்தியை நீ கீதோபதேசம் செய்து போக்கினாய். ஆத்ம வித்யையை உபதேசித்த உன் திருவடிகளில் எனக்கு பக்தி உண்டாகட்டும்.

இப்படி அர்ஜுனனின் தோழா, பார்த்தனின் தோழா என்று தன் பேரனான அர்ஜுனனின் பெயரை வைத்தே பகவானை அழைக்கின்றார் பீஷ்மர். ஏனென்றால், அர்ஜுனன் பகவானுக்கு மிகப் பிரியமானவன். தான், அவனுடைய தாத்தா, என்று நினைவூட்ட அப்படி அழைக்கின்றார் பீஷ்மர்.

இப்படி அழைப்பதால் ஒருவேளை அர்ஜுனன்மேல்தான் பகவானுக்குப் பரிவு அதிகம் என்று எண்ணுகின்றாரோ எனில், பீஷ்மர், கிருஷ்ணா! உனக்கு என்மேல் இருக்கும் அன்புதான் என்ன? நீ எனக்கு அருளியது போல், வேறொருவருக்கு அருளியதில்லை. என் சபதத்தை சத்தியமாக்குவதற்காக, நீ, உன் சபதத்தை தியாகம் செய்தாயே என்று, தன்மேல், பகவான் பொழிந்த தனி கிருபையை நினைத்து உருகுகின்றார். மகாபாரதப்போர் நடந்து கொண்டிருந்த சமயம். துர்யோதனனுக்கு பீஷ்மர் புரியும் போரில் திருப்தி இல்லை. பாண்டவர்கள் மேல் அவருக்கு உள்ள பாசத்தினால் சரியாக யுத்தம் செய்வதில்லை பீஷ்மர், என்று பழித்தான். இதைக்கேட்டு கோபம் கொண்ட பீஷ்மரோ, நாளை போர் தடைபடாமல் நடந்தால், இந்த பூமியில் பாண்டவர்கள் இல்லாமல் செய்வேன் என்று சபதம் செய்தார். இந்த சபதம் திரௌபதியின் செவிக்கு எட்ட, பதறினாள். மானஸீகமாக

கிருஷ்ணனை தியானித்தாள். அடுத்தகணம் பகவான், திரௌபதி என்று அழைத்தவாறே நுழைந்தான். திரௌபதியின் முகத்தில் கவலையைக் கண்ட பகவான் என்னவென்று வினவ, திரௌபதி , கிருஷ்ணா! பீஷ்மரின் சபதத்தை நீ அறியாயோ? என்றாள்.

பகவான் : பீஷ்மர் என்றைக்கோ நான் வாழ்நாள் முழுவதும் ப்ரம்மச்சாரியாக இருப்பேன் என்றார். அதற்கு என்ன?

*கொடியில் பகவானின் பொருட்டு ஆஞ்சநேயர் அமர்ந்திருக்கிறார். பகவான் இறங்கிவிட்டால் அவரும் இறங்கி விடுவார். தேர் தீ பிடித்து விடும். அதனால்தான் அங்குதான் இருக்கின்றேன் என்று அனுமனுக்கு உணர்த்தவும் தன்னுடைய உத்தரீயத்தை இருக்கையில் விட்டுச் சென்றானாம்.*

திரௌபதி : அதுவல்ல கிருஷ்ணா! இப்பொழுது செய்தது!

பகவான் : ஆ! அதுவென்ன?

திரௌபதி, பீஷ்மரின் சபதத்தைக் கூறியவுடன், கன்னத்தில் கைவைத்து அமர்ந்துவிட்டான் பகவான்.

திரௌபதி: கிருஷ்ணா! உபாயம் சொல் என்றால் உட்கார்ந்துவிட்டாயே!

கிருஷ்ணன்: திரௌபதி ! எனக்கு இதிலிருந்து தப்புவது எப்படி என்று தெரியவில்லை. எனக்கு ஒரு பெரியவரைத் தெரியும். அவர் காலில் விழுந்து பார். அவர் ஆசீர்வாத பலத்தினால், ஒருவேளை பாண்டவர்கள் பிழைக்கலாம்.

திரௌபதி : நான் ஏதும் செய்யத் தயார் கிருஷ்ணா! இப்படிக் கூறிய திரௌபதியை கிருஷ்ணன் போர்க்களத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு ஒரு கூடாரத்தைக் காட்டி உள்ளிருக்கும் பெரியவரிடம் ஆசி பெறச் சொன்னான். திரௌபதி உள்ளே ப்ரவேசிக்கும் பொழுது, அவள் நூபுரங்களின் த்வனி கேட்டு, பெண்களைப் பார்க்காத அந்தப் பெரியவர், வருபவள் இன்னார் என்று பார்க்காமல் வேறு பக்கம் திரும்பி இருந்தார். திரௌபதி

நமஸ்கரித்தாள். பெரியவர் "தீர்க்கசுமங்களா பவ" என ஆசீர்வதித்தார். இவள் மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்க, கோபம் கொண்ட அந்தப் பெரியவர், "எவ்வளவு முறை நமஸ்கரிப்பாய்" என்று வேகமாக திரும்ப, நிமிர்ந்து பார்த்த திரௌபதி எதிரே பீஷ்மரைப் பார்த்து திகைத்தாள்! பீஷ்மருக்கு இது நிச்சயமாக இவளாகச் செய்யவில்லை என்று தோன்ற, வெளியில் வந்து பார்த்தார். கிருஷ்ணனைக் கண்டவுடன், கிருஷ்ணா! இது என்ன விளையாட்டு! என் சபதத்தை பங்கம் செய்ய திட்டமா இது? நாளை போரில் நான் நிச்சயமாக சொன்னதை சாதிப்பேன் என்றார்.

பகவான் : அப்படியானால், தாங்கள் போர் தடை படாமல் நடக்குமானால் என்று கூறியுள்ளீரே, அது நடக்காமல் இருக்க ஷிகண்டியை அழைத்து வருவேன். ஷிகண்டி யுத்தத்தில் இருந்தால் அவனை எதிர்த்து போர் செய்யமாட்டேன் என்ற உமது சபதத்தை நான் மறக்கவில்லை!

பீஷ்மர் : இது என்ன பக்ஷபாதம்? நான் உன் பக்தன் இல்லையா? என் சபதத்தை பங்கம் செய்ய நினைக்கும் உன் சபதத்தை நான் பங்கம் செய்வேன். யுத்தத்தில் ஆயுதம் ஏந்துவதில்லை என்ற உன் சபதத்தை நான் பங்கம் செய்வேன். இது என் சபதம்! இப்படி பீஷ்மர் மற்றும் ஒரு சபதம் செய்தார்! அடுத்தநாள் ஷிகண்டி போரில் இருந்ததால் பீஷ்மரால் அவர் துர்யோதனனிடம் சொன்னதுபோல் பாண்டவர்களை அழிக்க முடியவில்லை. அதற்கு மறுநாள் பீஷ்மரை யுத்தத்தில் சந்திக்க முடியாமல், அர்ஜுனன் உட்பட பாண்டவ சைன்யம் திணறியது. அர்ஜுனன் போர் செய்ய முடியாமல் கிருஷ்ணனை தேரை வேறுபக்கம் திருப்பச் சொன்னான். பகவான் எவ்வளவு எடுத்துக்கூறியும், சண்டையிட பயந்த அர்ஜுனனைப் பார்த்து, கோபம் கொண்டவனாய், "நீ சண்டையிட மாட்டாய் என்றால், நானே சண்டைபோட்டு பாண்டவர்களான உங்களைக் காப்பேன்" என்று சொல்லி தன் உத்தரீயம் கீழே விழ, ரதத்தின் ஒரு சக்கரத்தை ஏந்தி, பீஷ்மரை நோக்கி ஓடினான் கிருஷ்ணன். உத்தரீயம் இல்லாமல் ஒரு வேலைக்குக் கிளம்பினால் அந்த வேலை

முடியாது என்று ஒரு நம்பிக்கை உண்டு. அதைக்கூடப் பொருட்படுத்தாமல் ஓடினான் பகவான்! அவன் பார்த்தனுக்கு சாரதி. அவன் இல்லாதபொழுது வேறொருவர் வந்து அமர்ந்திடாமல் இருக்க உத்தரீயத்தைப் பாதி தன் இருக்கையில் படும்படி விட்டு சென்றுவிட்டான் போலும்! இவன் கோபப்பட்டால் பூமி தாங்குமா? நடுங்கின பூமிதேவியை சாந்தப்படுத்தும் வண்ணம் உத்தரீயத்தின் மறுபாதியை பூமியில் விட்டிருந்தானாம்! கொடியில் பகவானின் பொருட்டு ஆஞ்சநேயர் அமர்ந்திருக்கிறார். பகவான் இறங்கிவிட்டால், அவரும் இறங்கி விடுவார். தேர் தீ பிடித்துவிடும். அதனால்தான் அங்குதான் இருக்கின்றேன் என்று அனுமனுக்கு உணர்த்தவும், தன்னுடைய உத்தரீயத்தை இருக்கையில் விட்டுச் சென்றானாம்.

இப்படி ரதத்தின் சக்கரத்தை தரித்து, சக்ராயுதபாணியாக தரிசனம் கொடுத்த பகவானைப் பார்த்தவுடன் சங்கநாதம் செய்தார் பீஷ்மர்! பகவானை ஆயுதம் எடுக்க வைப்பேன் என்ற அவரின் சபதத்தில் ஜெயித்த ஆனந்தம் பீஷ்மருக்கு. பிறகு அர்ஜுனன் சமாதானப்படுத்த, பகவான் தேருக்குத் திரும்பினான். இந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து பீஷ்மர், கிருஷ்ணா! என் சபதத்தை சத்யமாக்க உன் சபதத்தை விட்டுக் கொடுத்தாயே! உன் கருணை எத்தகையது. உலகம் பகவான் இந்த லீலையை அர்ஜுனனைக் காக்கும்பொருட்டு செய்தான் என எண்ணும். ஆனால், அது அர்ஜுனனுக்காக அல்ல. என்மேல் இருந்த கிருபையால் என்பதை நான் மட்டுமே அறிவேன், என்று உருகுகின்றார்.

## பெத்த பிள்ளையும் வித்த புளியும்!

ருத்ரேசன்

திருமதி.சியாமளா ராமஸ்வாமி பெரியகுளம் நாமத்வாருக்கு அடிக்கடி வந்து செல்லும் அன்பர்களில் ஒருவர். அருகிலேயே வசிக்கிறார். இவரது அக்கா புவனேஸ்வரி நாக்பூரில் வசிக்கிறார். புவனேஸ்வரிக்கு சத்யநாராயணன் என்ற 35வயது மகன் உண்டு. வருமானவரித்துறையில் மிக நல்ல வேலை பார்த்து வந்தார். கார் வைத்து கொண்டு நல்ல வசதியுடன் இருந்தவர்.

கடந்த 2011ஆம் வருடம் ஆவணி மாதம் பிள்ளையார் சதுர்த்திக்கு முன் தினம் இவர் காணாமல் போய் விட்டார். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பலவாறாக முயற்சித்து விட்டு எல்லோரும் வருத்தத்தில் மூழ்கினர். திரு.பம்மல் பாலாஜி பல இடங்களில் பிரார்த்தனை செய்து வருகிரார் அல்லவா! அப்படி பெரியகுளம் நாமத்வாருக்கு மார்ச் 25ஆம் தேதி வந்திருந்தபொழுது, முன்சொன்ன சியாமளாராமஸ்வாமி தனது அக்காவின் கஷ்டத்தை சொல்லி பிரார்த்தித்து கொண்டார். முடியாதது என்பது எதுவும் இல்லை. பெருமாள் இஷ்டப்படுகிறாரா என்பதுதான் முக்கியம்! திரு.பம்மல் பாலாஜியும் “நீங்கள் கவலைப்படாதீர்கள். எப்படியும் உங்கள் அக்காவின் பையன் கிடைத்து விடுவான். தைரியம் சொல்லுங்கள். நான் பெருமாளிடம் பிரார்த்தனை செய்கிறேன்” என்று சொல்லி அனுப்பினார். இதன் பின்னர் அந்த அம்மையார் இந்த பிரார்த்தனையை கொஞ்சம் மறந்து விட்டார். திரு.பாலாஜி அடுத்த இடங்களுக்கு சென்று விட்டார். பிரார்த்தனையை செவிமடுத்தவர் வேறு ஒருவர் அல்லவா? அவர் மட்டும் அதை மறக்கவில்லை.

மார்ச் 26ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை, பாலாஜி திருத்துறைபூண்டி சுற்றி உள்ள கிராமங்களுக்கு சென்று விட்டு முப்பதாம் தேதி கதிராமங்கலத்திற்கு சென்றிருந்தார். அங்கு புதுக்கோட்டையிலிருந்து திருமேனி என்பவரும் அவரது சகாக்களும்

வந்திருந்தனர். திருமேனி, திரு.பாலாஜியிடம் “எங்களுக்கு புளி வியாபாரம். ரொம்ப நாளாக இந்த வியாபாரம் சரிவர நடக்கவில்லை. என்ன செய்வதென்று புரியவில்லை. மனக்கஷ்டத்திற்கு என்ன விடிவு?” என்று கேட்டு பிரார்த்தித்தார். பாலாஜியும் பெருமாளிடம் பிரார்த்திப்பதாகவும் வியாபாரத்தில் முன்னேற்றம் தெரியும் என்றும் சொல்லி அனுப்பினார். மறுநாளே திருமேனியிடம் இருந்து போன் வந்தது. என்னவென்றால், ஒரே நாளில் 40ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரம் ஆயிற்றாம். அவருக்கு மகிழ்ச்சி. பாலாஜிக்கு ஒரு ஆச்சரியம். பெருமாளை நோக்கி “உனக்கு அவர்கள் கஷ்டம் எல்லாம் உன் கஷ்டம் போலவே தெரிகிறதோ. அதுதான் இவ்வளவு விரைவாக அனுக்ரஹம் செய்கிறாயோ?” என்று மானஸீகமாக நினைத்தார். ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள், தனது அனுக்ரஹ லிஸ்டில் மேலும் ஒன்றை வைத்திருந்திருக்கிறார் என்பது பாலாஜிக்கு அப்பொழுது தெரியாது. அது பெரியகுளத்தில் சியாமளாராமஸ்வாமி செய்த பிரார்த்தனைதான். மழையின் நடுவில், ஓரமென்றும் நடு என்றும் ஏதாவது இருக்கிறதோ? பெருமாள் கருணை பொழிகையில், நடுவில் மாட்டினால் அது மழைதான். நனைக்காமல் (அருளாமல்) விடாது.

பம்பாயிலிருந்து ஒரு பெண் நாக்பூருக்கு டிரெயினில் செல்ல பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்கிறார். வண்டி கிளம்ப அரை மணிநேரம்தான் இருக்கிறது. எதிர்த்த பிளாட்பாரத்தில் யாரோ தெரிந்த ஒரு அன்பர் நின்று கொண்டிருப்பதாக அவருக்கு பட்டது. நன்றாக பார்த்தால், அது நாக்பூரில் காணாமல் போன சத்யநாராயணன்தான். இந்த பெண்மணிக்கு, நாக்பூர் புவனேஸ்வரியை நன்றாக தெரியும். குடும்ப ஸ்நேகிதர்கள். அந்த பெண்மணி, நாராயணனை நேரில் பார்த்து “எங்கு இங்கு வந்தாய். வருகிறாயா, நாக்பூர் போகலாம்” என்று கூப்பிட்டு இருக்கிறார். நாராயணன் “ஓ! நீயா! நீ செல். இருநாட்கள் கழித்து நான் வருகிறேன்” என்றிருக்கிறார். இவரை விட்டால் பிடிக்க முடியாது

என்று அந்த பெண்மணிக்கு தெரியும். உடன் தன் தந்தைக்கு போன் போட்டு விவரத்தை சொல்லி இருக்கிறார். கையில் நாராயணனுக்கு சேர்ந்து டிக்கெட் எடுக்க பணம் இல்லை என தந்தையிடம் அவர் சொல்ல, தந்தை, உடனேயே இவர் அக்கவுண்டில் பணம் டிரான்ஸ்பர் செய்தார். இந்த பெண்மணியை ஏற்றி விட வந்த நெருங்கிய உறவினர் ஒருவர், ஏ.டி.எம்.மில் இருந்து பணம் எடுத்து, நாராயணனுக்கு டிக்கெட்டும் எடுத்து கொடுத்து விட்டார். அதுவரை நாராயணனிடம் பேச்சு கொடுத்தவாறே இருந்து விட்டார் அந்த சகோதரி. டிக்கெட் வந்தவுடன் நைசாக பேசி, ரெயில் கிளம்புகையில் தன்னுடன் அமர வைத்து கொண்டார். அப்புறம் என்ன? நாக்பூர் வந்து சேர்ந்தாகி விட்டது. புவனேஸ்வரிக்கும் அவரது தாயாருக்கும் பெரு மகிழ்ச்சி. ஒரு தாய்க்கு தன் மகன் கிடைத்த மகிழ்ச்சி. ஒரு தாய்க்கு தன் மகளின் கஷ்டம் தீர்ந்த மகிழ்ச்சி. தன் தாய் மூலமாக இந்த செய்தி சியாமளாராமஸ்வாமிக்கு தெரிய வந்தது. அவர் நேரிலும் தொலைபேசியிலும், கடிதம் மூலமாகவும் தனது குடும்பத்தின் நன்றியை பெருமாளுக்கு பாலாஜி மூலமாக தெரிவித்து கொண்டார். பிரார்த்தனை செய்து பதினோரு நாட்கள் கழித்து, நாராயணன் கிடைத்தார். அவரிடம் பேச்சு கொடுத்து பார்க்கையில் குடும்பத்திலுள்ளோருக்கு அவர் ஏழெட்டு மாதங்களாக, திருச்சி, கர்நாடகா எல்லாம் சென்றிருப்பதாக தெரிந்திருந்திருக்கிறது.

அங்கெல்லாம் விட்டு விட்டு ஏன் மும்பையில்தான் அவர் கிடைக்க வேண்டும் என்பது பெருமாளுக்கு மட்டுமே தெரியும் அல்லவா? நாமத்வாரில் நடக்கும் பிரார்த்தனைகள் அவர் காதில் சுலபமாக எட்டுகிறது என்பதும் இதன் பொருள் அல்லவா?

*பாலகர்களுக்கு ஒரு கதை*



## *குரு தந்த ஞானப்பழம்*

குரு அருளால்தான் ஞானம் கிடைக்கும் என்று ஒருவன் கேள்விப்பட்டான். அவன் உடனே உத்தமமான குரு ஒருவரை தேடி சென்றான். அவரை பணிந்து நின்றான். அவரிடம் "நீங்கள் எனக்கு ஞானம் அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அவன் மனதில் பற்பல எண்ணங்கள். தனக்கு என்ன உபதேசம் செய்ய போகிறாரோ என்று ஆவலுடன் காத்து நின்றான்.

அந்த குருநாதர் கருணை மிக்கவர். முகம் மலர்ந்து அவனை பார்த்து, தன் அருகிலிருந்த ஒரு வாழைப்பழத்தை எடுத்து கொடுத்தார். புன்சிரிப்புடன் அவனை திருப்பி அனுப்பி விட்டார்.

குருவை தேடி சென்றவன் அதனால் திருப்தி அடையவில்லை. மாறாக வருத்தப்பட்டான். தனக்கு ஒரு மந்திரமோ அல்லது யோகப்பயிற்சியோ கற்று தரவில்லையே என்று வருந்தினான். அவனுக்கு அந்த வாழைப்பழத்தை பார்த்தால் தன்னை அந்த குரு ஏமாற்றி அனுப்பி விட்டார் என்று தோன்றியது. வெறுப்பில் அந்த வாழைப்பழத்தை சாப்பிடாமல் தெருவில் தூக்கி எறிந்தான். அந்த வாழைப்பழத்தை தெருவில் செல்லும் மற்றொருவர் எடுத்து சாப்பிட்டார்.

அப்புறம் என்ன நடந்தது என்றால், வாழைப்பழத்தை சாப்பிட்டவருக்கு உண்மையான ஞானமே சித்தித்து விட்டது. அவர் தாளம் போட்டு பகவானை நிஜ ஆனந்தத்துடன், பஜனை செய்ய ஆரம்பித்து விட்டார்.

குருவை தேடி சென்றவன் அதை பார்த்து ஆச்சரியப்பட்டான். குரு நமக்கு அருள முயன்றும் அது நமக்கு கிடைக்கவில்லை. "ஒருக்கால் குரு இவனுக்கு அருளவே என்னிடம் பழம் கொடுத்தாரோ? அதனால்தான் என்னால் குருவின் பிரசாதத்தை எடுத்துக்கொள்ள முடியவில்லையோ" என்று நொந்து கொண்டான்.

குரு எப்படி அருளுவார் என்பது புரிந்து கொள்ள முடியாத ஒன்று என புரிந்து கொண்டான்.

மேற்கண்டது உண்மை சம்பவமாகும். அந்த குரு பண்டரிபுரத்து விட்டலனிடம் பரமபக்தி கொண்டிருந்த துக்காராம் ஸ்வாமிகள். சாப்பிட்டவரோ சாங்கேவர்மா என்கிற சாது. ஆகவே பாலகர்களே! நாமும் பெரியவர்கள் மற்றும் கடவுளின் பிரசாதத்தை பக்தியுடன் எடுத்துக்கொண்டு வந்தால், இறைவனின் அருள் கிடைப்பது சுலபம்.

**சனாதனப் புதிர் - பகுதி - 39 –ஆத்ரேயன்** ( விடைகள்: அடுத்த இதழில்)

1. ராவணனைக் கொல்ல பிரம்மாஸ்திரத்தை ஏவுமாறு ராமருக்கு ஞாபகப்படுத்தியது யார்?

2. 14 ஆண்டு வனவாசத்திற்குப் பிறகு ராமர் புஷ்பகவிமானம் மூலம் எந்த திதியில் பரத்வாஜ ஆச்ரமத்தை அடைந்தார்?

3. ஹனுமார் பரதனைப் பார்த்து நாளைய தினம் நீங்கள் ராமரை தரிசிக்கலாம் என்கிறார்? நாளைய தினம் என்ன நக்ஷத்திரம்?

4. ராமருக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்த எட்டு ரிஷிகள் யார்?

5. ராமர், பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன் எந்த நக்ஷத்திரம், எந்த லக்னத்தில் பிறந்தார்கள்?

6. ஜனகர், சீதா-ராமர் விவாஹத்தை, எந்த நக்ஷத்திரத்தில் பிரஸ்தாபிக்கிறார். கல்யாணம் எந்த நக்ஷத்திரத்தில் நடத்தப்பட்டது?

7. தசரதர் புத்ரகாமேஷ்டி அக்னியிலிருந்து கிடைத்த பாயஸத்தை தனது மனைவிகளுக்கு எந்த விதத்தில் பகிர்ந்து கொடுத்தார்?

8. தேவேந்திரனுக்கு மேஷவிருஷணன் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?

9. ராமருக்கு இளவரசர் பட்டாபிஷேகத்திற்காக தசரதர் பார்த்த நாள் எது?

10. ராமரது பட்டாபிஷேகம் என்று நடந்தது?

11. இராமாயணத்தில் சுக்ல பக்ஷ பஞ்சமி அன்று நடந்த நிகழ்வுகள் என்ன?

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று!


*திரு.எஸ்.ராஜப்பன்*

நமது பாரத புண்ணிய பூமியின் ஆணி வேராக திகழ்வது “ஆலய வழிபாடு”. “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்பன போன்ற நமது ஆன்மீக ஆன்றோரின் வாக்குகள், இதனை நன்கு விளக்குகின்றன. நமது தமிழக அரசின் சின்னமாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் கோவிலின் கோபுரம் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. நாம் நமது திருக்கோவில்களிலுள்ள திவ்ய மங்கள விக்கிரகங்களை ஜீவனுள்ள தெய்வங்களே என்கின்ற முழு நம்பிக்கையோடு வழிபாடு செய்து வருகின்றோமன்றோ? மேலும் இவ்வாலயங்களில் செயல்படும் தூயபணிகள்தான் உண்மையான தெய்வத்தொண்டு என்கின்ற உயரிய கோட்பாடு, நம் உயிர் நாடியாகி விட்டதன்றோ!

இன்றைய கலிகாலத்தில், நம்மை உய்விக்க பாடுபடும் நமது ஸத்குருநாதர் மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி இப்புண்ணிய பூமியில் ஸனாதன தர்மத்தை தழைத்தோங்க பல முயற்சிகள் எடுத்து வருகிறார். அவற்றில் “வேத சம்ரக்ஷணம், திவ்யதேச கைங்கரியம், நாமப்பிரசாரம்” ஆகியவை முக்கியமான கோட்பாடுகள் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோமல்லவா?

நமது சத்குருநாதர் மஹாமந்திர கீர்த்தனத்தின் மகத்துவத்தை பற்றி விசேஷமாக எப்பொழுதும் குறிப்பிடுவார் அல்லவா? நம் குருநாதர் “இப்புண்ணிய பூமியில் அவதரித்து பகவன்நாம கீர்த்தனத்தை பிரசாரம் செய்து வந்துள்ள மஹாபுருஷர்கள் பலர். அவர்களில் ஆன்மீக பேரொளியாக திகழ்ந்தவர் 16ஆம் நூற்றாண்டில் மேற்கு வங்கத்தில் தோன்றிய “ஸ்ரீகிருஷ்ண சைதன்ய மஹாபிரபு” ஆவார். மிக சிறந்த சமஸ்கிருத பண்டிதராக திகழ்ந்த சைதன்யர், கலிசந்தரணோபநிஷத்தில் ஸ்ரீநாரதமஹரிஷிக்கு ஸ்ரீபிரம்மதேவரால் உபதேசிக்கப்பட்ட “ஹரே ராம .. ஹரே கிருஷ்ண” என்னும்

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

மஹாமந்திர கீர்த்தனத்தை விட்டால் கலியுகத்தில் வேறுகதியில்லை என்று அறுதியிட்டு கூறியுள்ளார்" என்று சொல்வார். மேலும் "மஹாபிரபு வாழ்நாள் முழுவதும் நாமபிரசாரம் செய்ததோடு மட்டுமின்றி இப்புண்ணிய பூமியிலுள்ள எண்ணற்ற திருத்தலங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு சென்று, பகவத் தரிசனம் செய்து முடிவில் ஜெகன்னாதபுரியில் ஸ்ரீஜகன்னாத பெருமானின் திவ்யமங்கள விக்ரஹத்துடன் இரண்டறக்கலந்து விட்டார்" என்று பக்தி பாவத்தோடு நமது குருநாதர் கூறுவார்.

நம் குருநாதர் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முயற்சி, ப்ரேரணை மற்றும் பாக்கியமுள்ள பக்தர்களின் பங்கேற்பு இவற்றினால் பல திருக்கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு, தற்பொழுது நித்ய ஆராதனை, மாஸ, வருஷ உத்ஸவாதி கைங்கரியங்கள் நடைபெற்று வருவது நாம் அறிந்ததன்றோ! ஸ்ரீஸ்வாமிஜி இப்புண்னிய பூமியில் உள்ள எண்ணற்ற திருக்கோயில்களுக்கு சென்று, எம்பெருமானை ஸேவித்து எம்பெருமானை மங்களாஸாசனம் செய்வதோடு, பிரசித்தி வாய்ந்த திருக்கோவில்களில் எழுந்தருளி இருக்கும் பெருமான்களை பற்றியும், இப்பெருமான்களிடம் பக்தி செய்து வந்த பேரருளார்களை பற்றியும், இப்பூவுலகிற்கு உபன்யாசங்களின் வாயிலாக நேரிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாகவும், பறைசாற்றி வருவதை சொல்லவும் வேண்டுமா?

நமது குருதேவரின் பெருங்கருணைக்கு பாத்திரமான நமது சத்சங்க அன்பர் ஒருவரும், அடியேனும் குருநாதரின் அன்புக்கட்டளையால், சென்னையிலும் சென்னைக்கு அருகாமையிலும் கோயில் கொண்டுள்ள சுமார் 50வைணவத்திருத்தலங்களிலுள்ள எம்பெருமான்களை சேவிக்கும் பெரும்பேற்றினை (7.1.2012 சனிக்கிழமை முதல் 24.2.2012 வெள்ளிக்கிழமை வரை) பெற்றோம். இத்திருக்கோயில்களை தரிசித்து வந்த விபரத்தை ஆன்மிக அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

(தொடரும்)

## *சென்ற மாத சத்சங்கங்கள்*

**ஏப்ரல் 25 – 31 – புவனேஸ்வரி அம்மன் கோவில்** – சென்னை கே.கே.நகர் பாரதிதாசன் காலனி ஸ்ரீஸ்வாமிஜி புவனேஸ்வரி கோவில் கும்பாபிஷேகத்தை ஒட்டி கோவில் வளாகத்தில் **பக்த விஜயம்** தலைப்பில் உபன்யாசம் செய்தார்கள். ஸ்ரீபோதேந்திராள் , ஸ்ரீஸ்ரீதர அய்யாவாள், ஸ்ரீமருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள், ஸ்ரீபத்ராசல ராமதாசர், ஸ்ரீபுரந்தரதாசர், ஸ்ரீஜெயதேவர், ஸ்ரீதியாகராஜர் ஆகிய மகான்களின் சரித்திரங்களை சங்கீத உபன்யாசமாக செய்தார். திரளான அன்பர்கள் வந்திருந்து சிரவணம் செய்து குருவருள் பெற்றனர்.

**ஏப்ரல் 4, 5 – சென்னை நங்கநல்லூர் குருவாயுரப்பன் கோவிலில்** குருவாயூரப்பனின் மஹிமை குறித்து ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசம் செய்தார்கள்.

**ஏப்ரல் 6 தஞ்சாவூர்** – தஞ்சை காட் சத்சங்க மகளிர் மண்டலியினரால் 108 இடங்களில் மஹாமந்திர கீர்த்தனம் ஆரம்பிக்கப்பட்டதை ஒட்டி, **கந்தசராஸ் மகாலில்** 2000அன்பர்கள் சூழ **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. மேடையில் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெறும் 108இடங்களும் குறிக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தும் கோவில்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு பேசுகையில் ஸ்ரீஸ்வாமிஜி 108இடங்களில் மகாமந்திர கீர்த்தனம் நடைபெறுவதே இறைவனுக்கு ஒரு அஷ்டோத்திரம்தான் என்று குறிப்பிட்டார். மேலும் நாமகீர்த்தனத்தினால் விசேஷ பலன் பெற்ற பல அன்பர்களின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை குறித்து பேசினார்கள்.

**ஏப்ரல் 4 – சென்னை பிரேமிக பவனத்தில்** கும்பகோணம் பக்தை **ஸ்ரீஅம்மாளு அம்மாள்** அவர்களின் **ஸ்மாரக தினம்** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

**மார்ச் 23 – 31 பிரேமிக பவனத்தில் ராம நவமி**யை ஒட்டி ராமாயண மூல பாராயணம் நடைபெற்றது. **ஏப்ரல் 1–9** – ப்ரும்மஸ்ரீ புவனசுந்தர் கனபாடிகள் **இராமாயண உபன்யாசம்** செய்தார்.

**ஏப்ரல் 7 – ஸ்ரீஸ்வாமிஜி தூத்துக்குடி நாமத்வார்** சென்றிருந்தார்கள். சுமார் ஆயிரம் அன்பர்கள் வந்திருந்து குருநாதர் ஆசீர்வாதம் பெற்று சென்றனர். ஏப்ரல் 8ஆம் தேதி தூத்துக்குடி நாமத்வாரில் **சுந்தரகாண்டம்** குறித்து ஸ்ரீஸ்வாமிஜி பேசினார்கள். அன்று தூத்துக்குடியில் லோகக்ஷேமார்த்தமாக **மஹாருத்ரயக்ஞம்** நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**ஏப்ரல் 12 –திருஅரிமேய விண்ணகரம் –ஸ்ரீகுடமாடும் கூத்தன்** – பன்னிரண்டு வருடங்கள் முன்பு, 6.7.1998 அன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் புனருத்தாரணம் செய்யப்பட்ட திருநாங்கூர் ஸ்ரீகுடமாடும் கூத்தன் கோவிலுக்கு, மீண்டும் ஆகமவிதிகளின்படி திருப்பணிகள் செய்யப்பட்டு, ஏப்ரல் 12ஆம் தேதி மிக விமரிசையாக **ஸம்ப்ரோக்ஷணம்** நடந்தேறியது. ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன் அவரது நியமனப்படி, தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தார், இத்திருப்பணி கைங்கரியத்தை, ஏக தேசமாக மிக சிறப்பாக பூர்த்தி செய்தனர்.

**ஏப்ரல் 16**ஆம் தேதியன்று **ராணிப்பேட்டை சிப்காட் நரசிங்கபுரத்தில்** – நடைபெற்ற **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை**யில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கெண்டு அருளுரை வழங்கினார். இதை ராணிப்பேட்டை காட் சத்சங்கத்தினர் மிக நன்றாக ஒருங்கிணைத்திருந்தனர்.

அன்று மாலை **குடியாத்தம் நெல்லூர்பேட்டை கருப்புலீஸ்வரர் கோவிலில்** நடந்த **(திருநாவுக்கரசர்)அப்பர் ஜெயந்தி விழா**வில் கலந்து கெண்டு ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார். விழாவில் மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கினார்.

**ஏப்ரல் 10 – பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் பிரதிஷ்டா தின**த்தை ஒட்டி மூலமந்திர ஹோமம், அபிஷேகம், புறப்பாடு, அன்னதானம் ஆகியவை மிக விமரிசையாக நடைபெற்றது, ஏப்ரல் 2ஆம் தேதி அகண்டமாக காலை 6மணி முதல் மாலை 6மணி வரை ஹனுமான் சாலீசா பாராயணம் செய்யப்பட்டது.

**ஏப்ரல் 13**ஆம் தேதி சித்திரை திருநாளன்று மஹாரண்யம் **கன்யாகுமரி**

**ஜயஹனுமான் சன்னதி**யில் **லக்ஷ தீபம்** ஏற்றப்பட்டது. அன்று காலை முதல் மாலை வரை ஆஸ்ரமத்தில் தொடர்ந்து அன்னதானம் செய்யப்பட்டது.

**ஏப்ரல் 1 – 10 – ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரில்** முரளிஜி ஸ்ரீராமானுஜரின் சரித்திரத்தை **ஸ்ரீராமானுஜ வைபவம்** என்ற தலைப்பில் மிக அழகாக பத்து நாட்கள் உபன்யாசம் செய்தார்.

**ஏப்ரல் 11 –கடலூர் காட் சத்சங்கம்** பிற சமூகநிறுவனங்களுடன் இணைந்து வானமாதேவி பள்ளியில் **இலவச பல் சிகிச்சை முகாம்** ஒன்றை நடத்தியது. இதில் 225 மாணவர்கள் பயனுற்றனர்.

**மார்ச் 10 – 16 – மும்பை** அந்தேரியில் Eternal Wisdom for Modern times என்ற தலைப்பில் ஸ்ரீமத்பாகவதம் குறித்து ராமானுஜம்ஜி பேசினார். இது உள்ளூர் சத்குரு தொலைக்காட்சி மூலம் சுமார்5000 அன்பர்களை சென்றடைந்தது. மார்ச் 21,22 தேதிகளில் மும்பை செட்டா நகரில் உள்ள கோவிலில் சுமார் 350 அன்பர்கள் முன்னிலையில் பாகவததர்ம சாரத்தில் உள்ள நாம மஹிமை குறித்து அவர் பேசினார். 23,24 தேதிகளில் மும்பை மற்றும் பூனாவில் கார்பரேட் புரோகிராம்களில் ராமானுஜம்ஜி கலந்து கொண்டு பேசினார். 25,26 தேதிகளில் கோலாப்பூரில் சில கிராமங்களில் இந்தியில் ராமானுஜம்ஜி நாமமஹிமை குறித்து பேசினார்.



**ஏப்ரல் 8ஆம்தேதி சிவகாசியில் அமைய உள்ள புதிய நாமத்வாரில்** மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை ராமானுஜம்ஜி முன்னிலையில் நடைபெற்றது. ஏப்ரல் 9ஆம் தேதியன்று **தையல்பட்டி** என்ற ஊரிலும் **மம்சாபுரத்திலும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை**யை ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். ஏப்ரல் 10ஆம் தேதி கோதை நாச்சியார் கண்டெடுக்கப்பட்ட

**ஸ்ரீவில்லிபுத்தூரிலும்**, 11அம் தேதி காரியாபட்டியிலும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும் தனித்தனியே பலருக்கான பிரார்த்தனைகளையும் ராமானுஜம்ஜி செய்தார். 12, 13தேதிகளில் **பெரியகுளம்** மற்றும் **வத்தலகுண்டு நாமத்வாரில்,** ராமானுஜம்ஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். 13ஆம்தேதி ராமானுஜம்ஜி பலருக்காக குருநாதர் பாதுகைகளில் பிரத்யேக பிரார்த்தனைகளை செய்தார். இதில் பலரின் பிரார்த்தனைகள் மறுநாளே நிறைவேறியது குறிப்பிடத்தக்கது. **தூத்துக்குடி நாமத்வாரில்** 14ஆம் தேதி பலருக்கான **தனி பிரார்த்தனையும்** அங்கேயே மறுநாள்" கலியையும் பலிகொள்ளும்" குருநாதரின் மஹாமந்திர கீர்த்தனம் குறித்து **ராமானுஜம்ஜி உபன்யாசம்** செய்தார். 15ஆம் தேதி விருதுநகரில் ஒரு புதிய நாமத்வார் அமைவதற்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். அங்கு பேசிய பலர் நாமானுபவங்களை மிக அழகாக எடுத்துரைத்தனர். 16,17 தேதிகளில், **திருச்சி நாமத்வாரில்** "பிரார்த்தனைக்கான தேவை" மற்றும் "பிரார்த்தனைக்கான நோக்கம்" ஆகிய தலைப்புகளில் உபன்யாசம் செய்தார். 17ஆம் தேதி **ஸ்ரீரங்கம் கோனார் மண்டபத்தில்** ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். இவை அனைத்தும்



ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாணைப்படி மிக விமரிசையாக திரளான அன்பர்கள் சூழ பத்தே நாட்களில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

**மார்ச் 24,25 தேதிகளில், அமெரிக்கா டெக்சாஸில்** குருநாதரின் ஜெயந்தியை ஒட்டிய சத்சங்க நிகழ்ச்சிகள் DFW Hindu Temple-இல் திரளான அன்பர்கள் சூழ நடைபெற்றது. 24ஆம் தேதி கோவில் நிர்வாகிகள் அனைவரையும் வரவேற்க ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்களுடன் ஆரம்பித்து, **பூர்ணிமாஜி**யின் பிரார்த்தனை மற்றும் பாகவதம் குறித்த உபன்யாசங்களுடன் நிறைவு பெற்றது. மறுநாள் 25ஆம் தேதி 700அன்பர்கள் பங்கேற்க ஒரு **மஹாமந்திர கூட்டு**

## சனாதனப் புதிர் : பகுதி – 38 விடைகள் -ஆத்ரேயன்

1. ஈஸ்வர் சந்திர வித்யாசாகர். 1882-ல் பரமஹம்ஸர் ஸ்ரீ வித்யாசாகரை அவரது வீட்டில் சந்தித்தார்.

2. கல்கத்தா ஸம்ஸ்கிருத கல்லூரி

3.விதவைகளின் மறுமணம்: 7.12.1856 முதல் ஆயிரக்கணக்கான விதவைகளுக்கு மணம் செய்து வைத்தார். தனது பிள்ளையின் கல்யாணத்தை 11.8.1870-லும் , தனது பேரனின் கல்யாணத்தை 29.7.1891-லும் விதவைகளுடன் செய்து வைத்தார். மேலும் 1857 முதல் மே 1858 வரை 35 பெண்கல்விக்கான பள்ளிக்கூடங்களை தனது சொந்த செலவில் திறந்தார். 1300 பெண்கள் கல்வி கற்றனர்

4. நாளீகம் ; நாராசம் ; விகர்ணி அர்த்தசந்திரம் ;

5.ருத்ரபகவானால் திருவெண்காட்டில் தகிக்கப்பட்ட அந்தகன் போலவும் வஜ்ராயுதத்தால் அடிப்பட்ட விருத்திரன் போலவும், நுரையினால் பாதிக்கப்பட்ட நமுசி போலவும், இடியினால் மாண்ட பலாசுரன் போலவும், கரன் மாண்டு விழுந்தான்.

6. அகம்பனன் என்ற அரக்கன் 7. அகம்பனன் என்ற அரக்கன் ஜனஸ்தானத்தில் இருந்து தப்பித்து ஓடிவந்தவன்.


8. நந்தனம் ; சைத்ரரதம்

9. ரிக்ஷரஜன் என்னும் வானரம்

10. முதல் இருவர்களை ஸுக்ரீவனும், மூன்றாவது அரக்கனை அங்கதனும் கொன்றார்கள்

**பிரார்த்தனை** நடைபெற்றது. முன்னதாக நாட்டியம், இசை என பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. நிகழ்ச்சியை ஒட்டிய நினைவுமலரும் பிரசாதமும் வந்திருந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. மார்ச் 30 - ஏப் 1 - Hindu Temple of Wisconsin, Milwaukee, Chicago USA - வில் பூர்ணிமாஜி மூன்று நாட்கள் பாகவத தர்மத்தை குறித்து உபன்யாசம் செய்தார். குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளும் பெரியவர்களும் கலந்து கொள்ளக்கூடிய வித்தியாசமான புராண போட்டிகளும் இதில் இடம் பெற்றிருந்தது. இவற்றை பூர்ணிமாஜி அழகாக அமைத்திருந்தார். பலதரப்பட்ட வெளிநாட்டு மக்களும் அகண்டமாய் இங்கு நடைபெற்ற மஹாமந்திர கீர்த்தனத்தில் உற்சாகமாய் பங்கு கொண்டனர். ஏப்ரல் 6 - 8 - Holland Herrick District Public library auditorium, Michigan, USA- வில் பூர்ணிமாஜி பல சத்சங்கங்களை நிகழ்த்தினார். இதில் குழந்தைகளுக்கான கோபகுடீர நிகழ்ச்சிகளும் அகண்ட மஹாமந்திர கீர்த்தனமும் பாகவத உபன்யாசமும் இடம் பெற்றிருந்தது.

New CD Release from Chaitanya Mahaprabhu Nama Bhiksha Kendra - 4volumes - **Brindavanamum Nandakumaranum - Discourse by Sri Sri Swamiji**




**Contact Madhuram Stall at 044-23727400, 09442613710**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ப்ரேமிக வரதன் பஜன் மண்டலி (Regd)



52-A, F5, பாரமவுண்ட் கோர்ட், 12-வது அவின்யூ,
அசோக் நகர், சென்னை-600 083.
தொலைபேசி : 088705 73810 / 094441 66458
Email: rambharad@gmail.com

## ஸ்ரீ சீதாராம ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமும் பாகவத ஸங்கமமும்

at அயோத்யா மண்டபம், மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

**சனி 12.05.2012 முதல் ஞாயிறு 20.05.2012 வரை தினமும்**

| | | |
|---|---|---|
| காலை 6.30 - மதியம் 12.00 | : | ஸ்ரீ வால்மிகீ ராமாயண மூலபாராயணம் |
| காலை 7.30 - 8.30 | : | உஞ்சவ்ருத்தி – ஸ்ரீஸத்குரு ஸ்வாமிகள் |
| மாலை 06.00- 08.00 | : | ஸ்ரீ தியாகராஜ ராமாயணம் ஸங்கீத உபன்யாஸம் ஈரோடு பாகவதஸ்ரீ பாலாஜி பாகவதர் |

| | | | |
|---|---|---|---|
| சனி 12.05.2012 | 07.00 - 08.00 AM | தொடக்க விழா | மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளிதர ஸ்வாமிஜி அவர்கள் திருக்கரங்களால் குத்து விளக்கேற்றி துவக்கி வைக்கின்றார் |
| | 08.00 - 09.00 AM | ஸ்ரீமஹாகணபதி கீர்த்தனங்கள் மற்றும் குரு கீர்த்தனங்கள் | பாகவதஸ்ரீ கார்த்திக் ஞானேஸ்வர் பாகவத குழுவினர்கள் |
| | 09.00 - 10.30 AM | தோடயமங்களம் | கோவிந்தபுரம் ஸ்ரீ மடம் பாகவதஸ்ரீ தியாகராஜ பாகவத குழுவினர்கள் |
| | 10.30 - 01.00 PM | குரு கீர்த்தனங்கள் | "திவ்ய நாம திவாகர, ஸங்கீர்த்தன கலாநிதி" செதலபதி பாகவதஸ்ரீ ஸௌந்த்ரராஜ பாகவத குழுவினர்கள் |
| | 03.00 - 05.00 PM | ஸாது அபங்கங்கள் | ஸத்குரு ஞானாநந்த பஜனைமண்டலி பாகவதஸ்ரீ விஜய் க்ருஷ்ண பாகவதர், பாகவதஸ்ரீ பாலாஜி பாகவதர் குழுவினர்கள் |
| | 08.00 - 10.30 PM | திவ்யநாம ஸங்கீர்த்தனம் | பாகவதஸ்ரீ சட்டநாத பாகவத குழுவினர்கள் |
| ஞாயிறு 13.05.2012 | 08.00 - 10.00 AM | ஸ்ரீ கீத கோவிந்த மஹா காவ்யம் (அஷ்டபதி) | மோஹனூர் பாகவதஸ்ரீ ஸ்ரீகாந்த் கௌண்டின்யன் பாகவத குழுவினர்கள். |
| | 10.00 - 01.00 PM | அஷ்டபதி | தஞ்சாவூர் பாகவதஸ்ரீ தியாகராஜ பாகவத குழுவினர்கள் |
| | 03.00 - 05.00 PM | அஷ்டபதி | மாயவரம் பாகவதஸ்ரீ ஞானகுரு பாகவத குழுவினர்கள். |
| | 08.00 - 10.30 PM | ஸ்ரீ நாராயண தீர்த்த தரங்கங்கள் | பாகவதஸ்ரீ சட்டநாத பாகவத குழுவினர்கள் |

| | | | |
|---|---|---|---|
| **திங்கள் 14.05.2012** | 03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | நாம ஸங்கீர்த்தனம்<br>ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனங்கள் | "பாகவத சிரோமணி" ஸ்ரீமதி காந்திமதி சந்தானம் குழுவினர்கள்<br>"ஸங்கீர்த்தன கலாநிதி" உடையாளுர் பாகவதஸ்ரீ கல்யாணராம பாகவத குழுவினர்கள் |
| **செவ்வாய் 15.05.2012** | 03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | நாம ஸங்கீர்த்தனம்<br>ஸ்ரீ புரந்தரதாஸர் கீர்த்தனங்கள் | ஞானாநந்த நாம ஸங்கீர்த்தன மாதர் மண்டலி ஸ்ரீமதி கல்யாணி மார்கபந்து குழுவினர்கள்<br>ஈரோடு பாகவதஸ்ரீ ராஜாமணி பாகவத குழுவினர்கள் |
| **புதன் 16.05.2012** | 03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | **மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளிதர ஸ்வாமிஜி கீர்த்தனங்கள்**<br>ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ராள் கீர்த்தனங்கள் | பாகவதஸ்ரீ அஸ்வின் பாகவத குழுவினர்கள<br>ஆங்கரை பாகவதஸ்ரீ A.V.K. ராஜசிம்மன் பாகவத குழுவினர்கள் |
| **வியாழன் 17.05.2012** | 03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | ஸ்ரீ சுந்தரகாண்டம் நடன நாடகம் தெய்வீக பல்சுவை நிகழ்ச்சி<br>ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதி கீர்த்தனங்கள் | **GOD கோபகுடீரம் குழந்தைகள்**<br>ஸ்ரீவாஞ்சியம் பாகவதஸ்ரீ முரளிதர பாகவத குழுவினர்கள் |
| **வெள்ளி 18.05.2012** | 03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | நாம ஸங்கீர்த்தனம்<br>ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன அநுகரண பஜனை | மேலார்க்கோடு ரஞ்ஜனி - மதுவந்தி சகோதரிகள் குழுவினர்கள்<br>கடலூர் பாகவதஸ்ரீ கோபி பாகவத குழுவினர்கள் |
| **சனி 19.05.2012** | 08.00 - 10.00 AM<br>10.00 - 01.00 PM<br>03.00 - 05.00 PM<br>8.00 - 10.30 PM | நாம ஸங்கீர்த்தனம்<br>மீராபாய், கபீர்தாஸ், ஸுர்தாஸ், பாடல்கள்<br>தியானங்கள்<br>பூஜை, திவ்யநாமம், டோலோத்ஸவம் | பாகவதஸ்ரீ ஞானகிராம பாகவதர், பாகவதஸ்ரீ மஹாதேவ பாகவதர், பாகவதஸ்ரீ ராஜுபாகவதர்<br>பாம்பே பாகவதஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி பாகவத குழுவினர்கள்.<br>"மஞ்சப்ரா" பாகவதஸ்ரீ M.R.மோஹன் பாகவத குழுவினர்கள்<br>கோவை பாகவதஸ்ரீ ஜெயராமன் பாகவத குழுவினர்கள் |
| **ஞாயிறு 20.05.2012** | 07.00 AM<br>07.30 - 08.30 AM<br>09.00 - 01.00 PM<br>03.00 - 05.00 PM<br>06.00 - 07.00 PM<br>From 07.30 PM | ப்ரபோதனம்<br>உஞ்சவ்ருத்தி,<br>ஸ்ரீ சீதா கல்யாணம்<br>அபங்கங்கள்<br>ரத ஊர்வாலம்<br>வஸந்தகேளிகை, பவ்வளிம்பு, ஸ்ரீ ஆஞ்சநேயஉற்சவம் | **மருதாநல்லூர் ஸ்ரீ ராதா கிருஷ்ணமடம் ஸ்ரீ ஸ்ரீ கோதண்டராம ஸத்குரு ஸ்வாமிகள் (6-வது பீடாதிபதிகள்)**<br>பாகவதஸ்ரீ O.S. சுந்தர் பாகவத குழுவினர்கள்.<br>ஸ்வாமி புறப்பாடு<br>பாகவதஸ்ரீ சட்டநாத பாகவத குழுவினர்கள் |

*அன்பர்கள் இவ்வைபவ கைங்கரியங்களில் பலவிதத்திலும் பங்குகொண்டு குருவருளுக்கும் ஸ்ரீஸீதாராமரின் அருளுக்கும் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

*இப்படிக்கு*
*ஸ்ரீசட்டநாத பாகவதர்*
*08870573810*

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

## குடமாடும் கூத்தன் இவன் !

- ஸ்ரீமதி ஹேமா கல்யாண்,
அமெரிக்கா

குண்டலங்கள் அசைய காளிங்க நர்தனம் செய்தவன் எவனோ, அவனே கூர்மமாக வந்து, பாற்கடலை கடைய உதவி செய்தான்!

வனமாலை அணிந்து வேணு கானம் செய்தவன் எவனோ, அவனே வராகனாக வந்து, ஹிரண்யாக்ஷனைக் கொன்று, பூமியை மீட்டான்.

நல்வழியில் நாம் நடக்க பாகவதமாக வந்தவன் எவனோ, அவனே நரசிம்மனாக வந்து, பக்த ப்ரஹ்லாதனை கொஞ்சினான்!



வருணன் விடாது பொழிந்தபோது, மலையை தூக்கி காத்தவன் எவனோ, அவனே வாமனனாக வந்து, தன் மலர் பாதத்தால் மூன்றுலகையும் அளந்தான்!

பச்சை வண்ண மயிலிறகை தலை மேல் கொண்டவன் எவனோ, அவனே பரசுராமனாக வந்து, கோடாலி தரித்து, தந்தை சொல்படி கேட்டு நடந்தான்!

அஷ்டமியில் பிறந்து, கோகுலத்தை மகிழ்வித்தவன் எவனோ, அவனே நவமியில் ராமனாக கௌசல்யாவின் வயிற்றில் பிறந்தான்.

ராதே ராதே என்று மனருகி ராஸம் செய்தவன் எவனோ, அவனே ஸீதே ஸீதே என்று உள்ளம் குமுறி அழுது நின்றான்!

புன்னை மரத்தடியில், கோபர்களுடன் வனபோஜனம் செய்தவன் எவனோ, அவனே புத்தனாக வந்து போதி மரத்தடியில் ஞான ஒளியாய் அருளினான்!

கலிகாலத்தின் இறுதி பிரளயத்தில் ஆலிலையில் துயில்பவன் எவனோ, அவனே கல்கியாக வந்து பூமியை அதிர வைக்க போகின்றான் ஒருநாள்!

பானைகளை உடைத்து, வெண்ணையை உண்டவன் எவனோ, அவனே பாண்டுரங்கனாக வந்து பக்த லீலைகள் பல புரிந்தான்!

கண்கள் என்ற பெயர் எவனால் வந்ததோ அவன்
கற்கண்டு பெயரை சொல்ல கூட எனக்கு அருகதை இல்லை!
த்வாரகையை ஆண்டு யாதவர்களை காத்தவர் எவரோ அவரே
மதுரபுரி ஆஸ்ரமத்தில் எழுந்தருளி பக்தர்களை காக்க வருகிறார்!
நாம கோஷம் கேட்டதும் பறந்து ஓடி வருபவரும் அவரே!
நமக்கு கவசமாக இருந்து அல்லும் பகலும் காப்பவரும் அவரே!
கருணாமூர்த்தியும் அவரே! கண்கண்ட தெய்வமும் அவரே!
கற்பகதருவும் அவரே! கலியுக தெய்வமும் அவரே!
அவர் ஸ்மரணத்தை அனுதினம் செய்தால் போதுமே!
அவனியில் தெய்வங்கள் யாவும் மகிழுமே!

அரிமேவிய விண்ணகரத்தோனே! அம்ருத வள்ளியின் நாயகனே! அமர்ந்த கோலத்தில் காட்சி தருபவனே! ..

குடமாடும் கோபாலனே! உனக்கு குட (கும்ப) அபிஷேகமா! குடும்பத்தோடு வந்து உன்னை தரிசிக்க மனம் துடிக்குதைய்யா!

இடைவிடாது பக்தர்களுக்கு கருட சேவையில் அருள்பவனே! இடையனாக வந்து உதங்கனுக்கு அமிர்தம் அளித்தவனே!

உதங்கனுக்கு அருளிய குரு பக்தியை
உன் பக்தியை எனக்கும் தந்தருளப்பா!

## *ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்*

*- ஜனனி* ஸ்ரீபகவன்?தாஸ் பாபா- 1

ப்ருந்தாவனத்தில் யமுனைக்கரையில் மக்கள் மிகுதியில்லாத ஒரு பகுதியில் மூங்கில் மற்றும் செடி கொடிகளால் சூழப்பட்ட ஒரு மிகவும் ரம்யமான இடம் உள்ளது. இதற்கு டடியாஸ்தான் என்று பெயர். இவ்விடத்தில் ஸ்வாமி ஸ்ரீஹரிதாஸ் அவர்களின் பரம்பரையை சேர்ந்த சந்துக்கள் வசிப்பார்கள். இவர்கள் பஜனையில் நிஷ்டையுடையவர்களாயும், உடம்பில் எல்லா பாகங்களிலும் வ்ரஜ தூசியை பூசியவர்களாகவும், கையில் வ்ரஜ மண்ணினால் ஆன ஒரு கமண்டலுவை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஸ்வாமி ஸ்ரீபகவன்தாஸ்ஜீ என்பவர் இவ்விடத்தின் மஹந்த் (தலைவர்) ஆக இருந்தார்.



மத்யப்ரதேசத்தில் ஒரு உயர்ந்த அந்தண பக்தர்களின் குடும்பத்தில் இவர் பிறந்தார். அவருடைய பூர்வீகர்கள் உயர்ந்த ராஜ்ய பதவிகளில் இருந்தனர். அவருடைய குடும்பத்தினர் ராதாவல்லப சம்ப்ரதாயத்தில் தீக்ஷை பெற்றிருந்தனர். அவர்கள் சொந்தமாக ஒரு பெரிய கோவில் வைத்திருந்தனர். அதில் ராதாக்ருஷ்ணரின் மணிமயமான திவ்ய மூர்த்திகளை மிகவும் ப்ரேமையுடன் உபாசித்தனர்.



இருபது வயதானபோது பகவன்தாஸ்ஜி டடியாஸ்தானத்தின் ஸ்ரீமதுராதாஸ்ஜீயிடமிருந்து, மஹந்த் தீக்ஷை பெற்று வீட்டை விட்டு நிரந்தரமாக

ப்ருந்தாவனம் வந்து விட்டார். மதுராதாஸ்ஜீயிடமிருந்தே சந்யாஸமும் பெற்று, அங்கேயே பஜனை செய்ய தொடங்கினார். 1944ஆம் ஆண்டு டடியாஸ்தானத்தின் தற்காலிக மஹந்த்தாக இருந்த ஸ்ரீராதாப்ரசாத தேவிஜி பரமபதம் அடைந்தபோது, பகவன்தாஸ்ஜீயை அடுத்த மஹந்த்தாக அங்குள்ளோர் ஏக மனதாக தேர்ந்தெடுத்தார்கள்.

ஸ்வாமி பகவன்தாஸ்ஜி மிகவும் ப்ரபாவமுடைய மஹாத்மாவாக இருந்தார். பெரிய பெரிய ராஜாக்கள், மஹாராஜாக்கள், உயர் பதவியிலிருந்தவர்கள் எல்லோரும் அவருடைய சிஷ்யர்களாக இருந்தனர். அவர் காலத்தில் வாழ்ந்த பல பண்டிதர்கள் மற்றும் பெரும்புள்ளிகள், பாபாவின் சத்சங்கம் தங்களுக்கு கிடைத்ததை பெரும் பாக்யமாக எண்ணினார்கள்.

ஒரு சிறந்த மஹந்த்திடம் இருக்க வேண்டிய காரிய கௌசலமு,ம் பக்தி பாவமும், தைன்யமும் பாபாவிடம் பரிபூர்ணமாக இருந்தது. அவர் தன்னை டடியாஸ்தானத்தின் மஹந்தாகவோ ஸ்வாமியாகவோ கருதாமல் ஒரு சேவகனாகவே எண்ணினார். அங்கு ஏதாவது பழுது வேலை நடக்குமானால் அவரும் வேலையாட்களுடன் செங்கல், ஜல்லி இவற்றை சுமப்பார். ஆஸ்ரமத்தில் ப்ரஸாத விநியோகத்திற்கு பின், அவ்விடத்தை அவரே சுத்தம் செய்வார். யார் எவ்வளவு கெஞ்சினாலும், செவி சாய்க்காமல் அவரே இப்பணியை செய்வார்.

சரணாம்ப்ருதம் (பாதோதகம்) மற்றும் பகவத்ப்ரசாதத்தை அவர் மிகவும் மதிப்பார். ப்ரசாதத்தின் ஒரு பருக்கை கீழே விழுந்தாலும், அவர் அதை எடுத்துத்தான் உண்பார்.

ஒருமுறை டடியாஸ்தானில் ஒரு உத்ஸவம். வைஷ்ணவர்கள் ப்ரசாதம் பெற்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது நிகழ்ந்த சம்பவம், பிரசாதத்தை பாபா எப்படி மதிக்கிறார் என்பதை காட்டியது.

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா -106*

*மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்*

மழை பெய்யும் போது அதன் பேரொலி நம்மை நடுங்கச் செய்யும். ஆயினும், பெய்த மழையால் உண்டாகிய மகிழ்ச்சி இனபம் தரும். இதுவே எம்பெருமான் அழிக்கக் கூறும் சொல் என்றார். ஸ்ரீஆண்டாள் திருப்பாவையில்,"மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை" என்று கூறியதை இங்கு ஒப்பிடுக. மாற்றாரை அழிக்காமல் அருளிவிட்டு, அவரது மாற்றை, அகங்காரத்தை, செருக்கை, மட்டும் அழிக்கின்றான் பகவான் என்கிறார் ஆண்டாள். இந்திரன் கண்ணனோடு மாறுபட்டபொழுது இந்திரனை அழிக்காமல், குன்றைக் குடையாகப் பிடித்து, இந்திரன் செருக்கை அழித்ததை இங்கு ஒப்பிட்டுக் காண்க.

இனி கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமால் இடிமுழக்கத்துக்கொப்பான குரல் உடையவர் எனலாம். இடிமுழக்கம் கேட்ட அளவிலேயே பாம்புகள் உயிர் துறக்குமாப் போல் செறல்வயின் மொழி கேட்ட அளவில் பகைவர் அழிந்து படுவர் என்பதாம்.

*முடிந்ததும், முடிவதும், முகிழ்ப்பதும், அவை மூன்றும்*

*கடந்து, அவை அமைந்த கழலின் நிழலவை*

முடிந்தது என்றால் தோன்றியது என்றாகி, இறந்த காலமாகும். முடிவது என்றால், இனிமேல் நிகழ இருப்பதாகிய எதிர்காலமாகும். முகிழ்ப்பது என்பது தோன்றிக் கொண்டே இருப்பது எனப் பொருள்படுவதாதலின் நிகழ்காலமாகும்.

ஆக இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் முக்காலங்களையும் கடந்து நிற்பவன் இறைவன். அவன் காலாதீதன். மூன்று காலங்களையும் உண்டாக்கியவனே அவன் ஆகிறபோது அவனைக் காலம் கட்டுப் படுத்த முடியுமா? அவன் காலம் கடந்தவன். அவன் காலங்கள் தந்தவன் என்று இரண்டு வகையாலும் பிரித்துக் காட்டும்படி, காலங்கடந்தவன் என்ற தொடர் இறை நிலைக்கு ஏற்ப அமைந்தது.

காலக்கூறுபாடுகளைக் கடந்து, அக்காலங்கள் தம்மிடத்தே அடங்கிக் கிடக்கின்றதால் நிழலை உடையவனே என்று புகழ்கிறார். காலங்கள் அவனுக்குக் கட்டுப்பட்டவை என்பதையே காலங்கள் பொருந்திய தாள் நிழலை உடையாய் என்பது குறித்தது.

*போகின்ற காலங்கள் போய காலங்கள் போகு காலங்கள் தாய் தந்தை உயிர் ஆகின்றாய்! உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ* (*திருவாய்.2.6:10*) என்னும் திருவாய்மொழி காலத் தத்துவமாகவே எம்பெருமான் இருப்பதை நிற்கிறது.

இராவணனுக்கு அனுமன் இராமனது பரத்துவம் கூறும் இடத்தில்,

*மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய*

*காலமும் கணக்கும் நீத்த காரணன் கை வில் ஏந்தி*

*சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து , தொல்லை*

*ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்*

(*கம்ப.5884*) எம்பெருமான் காலம் கடந்தவன் என்பதைக் கம்பர் விளக்கியுள்ளமை காண்க. முத்தொள்ளாயிரம் கடவுள் வாழ்த்தில் சிவபெருமானை இவ்வாறே கூறியுள்ளமை இங்கு பொருத்தி அறிந்து மகிழ்தற்குரியது.

*மன்னிய நாண்மீன் மதி கனலி என்று இவற்றை*

*முன்னம் படைத்த முதல்வனைப் பின்னரும்*

*ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்*

*ஊர்திரைநீர் வேலி உலகு*

என்கிறது முத்தொள்ளாயிரம். நட்சத்திரங்களையும் சூரிய சந்திரர்களையும் முன்னம் படைத்த பெருமானை ஒரு திருவாதிரை என்ற நட்சத்திரத்தில் பிறந்தவனைப் போல இவ்வுலகம் பேதமையால் கூறி நிற்பதைச் சுட்டிக் காட்டி காலத்தை உண்டாக்கியவனே இறைவன் என்கிறது முத்தொள்ளாயிரம்.

(தொடரும்)

## மாலே மணிவண்ணா -106

ஜாதவேதர் என்றால் எல்லா ஜீவராசிகளை பற்றியும் அறிந்த அக்னிதேவன் என்று பொருள். இப்பெயர் கொண்டிருந்த ஜாதவேத முனிவர், கூடலசங்கமத்தில், எளிமையான வாழ்க்கையையும் அன்பு மயமான சைவ மதத்தையும் போதித்து வந்தார். நேர்த்தியாக லிங்கவழிபாடு செய்வார். அவர் பூஜைகளில், நேரம் செலவாகும். ஆனால் அது அவருக்கு தெரியவே தெரியாது. லயித்திருப்பார். சகலமும் கடந்த இம்மகானுக்கு எதற்கு பிரார்த்தனையும் பூஜையும் என்று வந்தவர் நினைப்பர். அம்மகான் தனது அன்பை அம்மக்களிடம் கொட்டி வந்தார். அந்த அன்பு காய்த்து பழமாகும் நாள் நெருங்கி கொண்டிருந்தது. வேதத்தில் மிகுந்த அபிமானமும் ஆழ்ந்த ஞானமும் கொண்ட இம்மகான், வேதம் தழைக்க வேண்டி பல முயற்சிகளை எடுத்து வந்தார். தனது சீடர்களுக்கு தானே பாடம் எடுப்பார். வேதம் கற்பிப்பதில் ஆர்வம் காட்டிய இவர், அதில் சிறந்த மாணாக்கர்களை அவரவர் விருப்பப்படி ஊக்குவித்து வந்திருந்தார். மறுபுறத்தில் சமூகத்தில் இருந்த ஏற்றத்தாழ்வுகளை புறக்கணித்து சகலரையும் ஆன்மீகத்தில் வழிநடத்தி வந்தார்.

ஒருமுறை காபாலிகர்கள் வாழ்ந்து வந்த இடத்திற்கு எதேச்சையாக இவர் செல்ல நேர்ந்தது. அங்கு தவறான விஷயங்கள் நடந்து வருவதற்கான அறிகுறிகளை கண்டு, மிகவும் வருத்தப்பட்டார். அவர்களுக்கு தக்கவாறு புத்திமதி கூறினார். தாமே நேரில் கண்டிப்பது முழுக்க சாத்தியமில்லை என்பதால், அவர்களில் தன்மையான சிலரை நல்வழிப்படுத்தினார். அப்படி மாறிய ஒரு சிலரை தனது சீடர்களாக வைத்து கொண்டார். அவர்களை கொண்டே கொடுமையான நரபலி போன்ற செயல்களை எல்லாம் தடுத்து வந்திருந்தார். இவர் இப்படி பிரச்சாரம் செய்தபின்னர்தான் காட்டு வழிகளில் எல்லாம் அங்கிருந்த ஜனங்கள் சுதந்திரமாக செல்ல முடிந்தது. கடும் தபஸ்வி என்பதால் காபாலிகர்கள் உட்பட எவரும் இவரை மதித்து வந்தனர்.

இந்த ஜாதவேத முனிவர்தான் பரமேஸ்வரனை நோக்கி பிரார்த்தித்து வந்தார். அதே சமயத்தில், நாரதர் பரமேஸ்வரனிடம்

அன்பு மயமான சைவ மதம் தழைக்க ஒருவர் உலகில் அவதரிக்க வேண்டினார் என்றும், உடனே, பரமேஸ்வரன் நந்திதேவரை உலகில் பசவராக பிறக்க வைத்தான் என்றும் சொல்வர்.

பசவர் பிறக்க போவது ஈசான்யகுருவிற்கும் தெரிய வந்தது. அவர், ஒருநாள் அதிகாலை நதியில் ஸ்நானம் செய்து விட்டு , நதி கரையில் தியானத்தில் அமர்ந்தார். அப்பொழுது, வானில் மின்னல் போன்று ஒரு ஒளி தோன்றி, தவழ்ந்து சென்று கீழ்வானத்தில் மறைந்தது. அந்த ஒளி அவருக்கு மட்டுமே தெரிந்தது. ஏனோ அவருக்கு அப்பொழுது மனம் பரவசமுற்றது. இருப்பினும், அவர் அதில் தன் மனதை செலுத்தவில்லை .

அதே தினம் மாலை, பகேவாடியில் இருந்த மதிராஜர் தன் மனைவியுடன் ஈசான்ய குருவை பார்க்க வழக்கம் போல் வந்திருந்தார். ஈசான்யர்தான் அவருக்கு குலகுரு. மதலாம்பிகையை பார்த்தவுடன். ஈசான்ய குரு, தாம் மின்னல் என்று எதை பார்த்தோமோ அது, அவள் வயிற்றில் சேர்ந்திருக்கிறது என்று புரிந்து கொண்டார். என்றுமே புன்னகைத்து வழி அனுப்பும் சுபாவமுடைய அந்த முனிவர் அன்று மட்டும் மதிராஜரிடம் "மதலாம்பிகையை ஜாக்கிரதையாக பார்த்து கொள். வழக்கெல்லாம் ஒன்றுமில்லையே" என்று சொல்லி விசேஷமாக அனுக்ரஹித்து அனுப்பி வைத்தார். ஒன்றும் புரியாவிடினும், பெரியோர்களிடம் மரியாதை தெரிந்த மதிராஜர், நமஸ்கரித்து விட்டு கிளம்பி சென்றார். சிலநாட்களில், மதிராஜரிடம் மதலாம்பிகை, தான் மறுபடி பிரசவிக்க இருப்பதாக சொன்னாள். மதிராஜர் கிளம்பி சென்ற அன்று இரவு, ஈசான்ய குரு தன் சீடர்களை பார்த்து "என் லட்சியம் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை" என்று கூறி புன்னகைத்தார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நடக்க போவதை அவர் மட்டும்தானே அறிந்திருந்தார்?

ஒரு ஏழெட்டு மாதங்கள் கழித்து பகேவாடி அக்ரஹாரத்தில் ஒரு பசுமாடு இறந்து போனது. அதை எடுத்து போக, ஒரு சிறு பையன் அக்ரஹாரத்திற்கு வந்திருந்தான். அவன்தான் பசவரின் வாழ்க்கைக்கு பிள்ளையார் சுழி.

(தொடரும்)

"மதுரமுரளி" மாத இதழுக்கு சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai – 83 என்ற முகவரிக்கு ரூ120/–ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு : +91–44–24895875


- Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

ஏகாதசி -- மே 2, 16 , 31

மே 1 - 10 -- வசந்தோத்ஸவம்

மே 12 - 20 -- ஸ்ரீசீதாராம சாம்ராஜ்ய பட்டாபிஷேகம், அயோத்யா மண்டபம், மாம்பலம்

மே 23 -- பாரதிதாசன்? காலனி புவனேஸ்வரி அம்மன்? கோவில்? கும்பாபிஷேகம்

மே 25 -- மணிமங்கலம் பிள்ளையார் கோவில்? கும்பாபிஷேகம்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.